**Deposition of Witness**
**Additional Subordinate Judge, Tenkasi.**

Mcop 288 of 2021

ம.சா.3 பால்கனி

| | |
|---|---|
| Name | : பால்கனி |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Religion | : |
| Occupation | : |
| Age | : |
| Date | :2.7.25 |

நான் நீதிமன்றத்தின் அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் என்னிடம் கோரிய ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன்.

நான் தற்போது பாவூர்சத்திரம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். பாவூர்சத்திர காவல் நிலைய குற்ற எண்.418/2020 வழக்கின் பார்வை மகஜர், மாதிரி வரைபடம், லிங்கம் என்பவரின் விபத்து பதிவேடு, மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை, குற்ற இறுதி அறிக்கையின் உண்மை நகல், விபத்து சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை ஆட்டோவை ஓட்டி வந்த ஓட்டுநர் அடைக்கலப்பட்டணத்தை சேர்ந்த வடக்கு தெரு, ஆபிரகாம் மகன் பொன்ராஜ் என்பவர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் ஆட்டோவை ஓட்டி வந்த ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இருந்து வந்துள்ளது. குற்ற இறுதி அறிக்கையின் படி லிங்கம் என்பவருக்கு முதுகு, மார்பு, அடிவயிறு ஆகிய பகுதிகளில் சாதாரண உள்காயங்கள் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்ற வழக்கானது, தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில்

STC.466/2023 என கோப்பில் எடுக்கப்பட்டு, 04.07.2025ம் தேதி Charge Frame–ற்காக வாய்தா போடப்பட்டது. பார்வை மகஜர் – சா.சா.ஆ.3. மாதிரி வரைபடம் – சா.சா.ஆ.4. லிங்கம் என்பவரின் விபத்து பதிவேடு – சா.சா.ஆ.5. மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை – சா.சா.ஆ.6. குற்ற இறுதி அறிக்கையின் உண்மை நகல் – சா.சா.ஆ.7 என்று குறியீடு செய்யப்பட்டது.

3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் படி முதல் தகவல் அறிக்கையானது, விபத்து நடந்து ஒரு நாள் காலதாமதமாகத் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காலதாமதத்திற்குரிய காரணத்தை மனுதாரர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். TN–76–B–9300 என்ற ஆட்டோவின் உரிமையாளர் கனகா என்பவர் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் இந்த ஆட்டோவின் காப்பீட்டு சான்றிதழ் கனகா பெயரில் தான் துலங்கும் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் TN–76–B–9300 என்ற ஆட்டோவின் உரிமையாளர் ராஜேஷ் என்பவர் தான் என்று எங்களது ஆவணங்களின் படி துலங்குமா? என்றால் இந்த கனகாவிற்கு முந்தைய உரிமையாளர் ராஜேஷ் என்று தான் ஆவணத்தில் உள்ளது. மனுதாரருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மையை என்னால் கூற இயலாது என்றாலும், மருத்துவரால் தான் கூறமுடியும் என்றால் சரிதான்.

(ஒம்)ஏ.பிஸ்மிதா
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.